# "விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சிங்களம் தேவை"

## உதவி அரசாங்க அதிபர் கூறுகிறார்

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபால் பெட்டி எண் : 49
போன் [illegible]

National Tamil Daily

மலர் 9
இதழ் 132
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆனி 9 ரபி அவ். 14 வெள்ளிக்கிழமை [23-6-67]

யாழ்ப்பாணம், வெள்ளி
''தமிழர்கள் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன அவர்கள் எப்படித்தான் தலைகரணமாய் நின்றாலும், சிங்களம்தான் இந்நாட்டின் அரசகரும மொழி. ஆதலால் தமிழ் மக்களின் எதிர்கால நன்மைக்காக, இங்குள்ள தமிழ் பாடசாலைகளில் சிங்கள மொழியைப் படிப்பிக்க ஆசிரியர்களாகிய நீங்கள் முயற்சி செய்வீர்களானால் அது ஒரு தேசத்தொண்டாக இருக்கும்''

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி உயர்கலா மன்றத்தில் நேற்றுக்காலை நடந்த அகில இலங்கை சுவீகரிக்கப்பட்ட பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்க வருடாந்த கூட்டத்தில். வடமாகாண உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

[2-ம் பக்கம் பார்க்க]

# "தி. மு. க. ஆட்சி பற்றி சிறிமா கூறுவது பொய்ப்பிரசாரம்"

## தமிழக சட்ட சபையில் அண்ணா விளக்கம்

### இலங்கையில் இந்திய தூதராக ஒரு தமிழரை நியமிக்க கோருகிறார்

சென்னை, ஜூன் 22
தமிழக தி. மு. க. அரசாங்கம் பற்றிய இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் கருத்துக்களை, தமிழக அரசு முதன்மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை மறுதலித்துள்ளார்.

நேற்று, தமிழக ராஜ்ய கீழ் சட்டசபையில், 1967-68க்கான பட்ஜெட் மீதான பொது விவாதத்தின்போது கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் முதன்மந்திரி திரு. அண்ணாதுரை, திருமதி பண்டாரநாயக்காவின் கூற்றுகள் பற்றிக் குறிப்பிட்டார்.

தமிழக தி.மு க. அரசாங்கம்பற்றிஇலங்கைஎதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் கருத்துக்களைத் தாம் பத்திரிகைகளில் படித்தறிந்ததாகவும், அவை வெறும் பொய்ப் பிரசாரமேயாகு

[6-ம் பக்கம் பார்க்க]

## "அரசாங்கமே எம்மைப் புறக்கணிக்கிறது"

### மீலாத் விழாவில் முஸ்லிம் பிரமுகர்

யாழ்ப்பாணம், வெள்ளி
''உலக முஸ்லீம் மக்களுக்கு இப்பொழுது சோதனை காலம நடந்துகொண்டிருக்கிறது. யாழ்ப்பாண முஸ்லிம்களாகிய எம்மைப் பொறுத்தவரையில்இது ஒரு கூடாத காலமே முஸ்லீம்கள் எது விஷயத்தில் இறங்கினாலும் தோல்வியே ஏற்படுகின்றது. எமது நியாயமான கோரிக்கைகள் கல்வி, தொழில் முன்னேற்றங்கள் எல்லாமே குன்றிக்கொண்டு போகின்றன. இவ்வுலகத்தில் நாம் சந்தோஷப்பட ஒன்றுமே இல்லை.''

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் ஐந்து முச்சந்தியில் நடைபெற்ற மீலாத் விழாவில் யாழ்ப்பாணம் உஸ்மானியாக் கல்லூரி அதிபர் திரு எம் ஏ. குத்தூஸ் மேற்கண்டவாறு

[6-ம் பக்கம் பார்க்க]

## 'பலாலி விமான நிலையம் உடன் திருத்தப்பட வேண்டும்'

### மாவட்ட இணைப்புக் கூட்டத்தில் நல்லூர் எம்: பி. வற்புறுத்து

யாழ்ப்பாணம், வெள்ளி
இலங்கையிலுள்ள விமான நிலையங்களில்பலாலி விமான நிலையம் முக்கியமானதொன்றாகவிருக்கின்ற போதிலும் அது பல காலமாகத் திருத்தம்செய்யப்படாமல் அலங்கோலமான நிலையில் இருப்பதால் இதுசம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென நல்லூர் எம். பி. டாக்டர் இ. மு. வி. நாகநாதன் யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

வடமாகாண அரசாங்க அதிபர் திரு வேர்ணன்அபயசேகரா தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் டாக்டர் நாகநாதன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:- 1942-ம் ஆண்டுவரை முதற்தரமாக இருந்த பலாலி விமானத்தளம் 1942 ம் ஆண்டில் அமெரிக்கர்களின் குண்டு வீச்சினால் சேதமடைந்தது. விமானம் இறங்கும் நிலத்தின் அயற்பரப்பு மிகவும் சீர்கேடாகவும், மலைப்பாங்கான கற்கள் உடையதாகவும் இருக்கின்றது. கொழும்பு - இந்தியா விமானங்கள் இந்த விமான நிலையத்திலேயே தங்கிச் செல்வதாலும் இலங்கையிலுள்ள விமான நிலையங்களில் பலாலி விமான நிலையம் முக்கியமானதொன்றாக விருப்பதாலும்ஒரு தொகை பணத்தை அரசாங்கத்திடமிருந்து பெற்று இதனைத் திருத்த வேண்டியது அவசியமாகும்.

காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் துறைமுகங்கள் பற்றி அரசாங்க அதிபர் பேசும்போது காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு இரண்டு இறங்குதுறைகளை அமைக்க ஒரு லட்சம் ரூபா ஒதுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவ

[6-ம் பக்கம் பார்க்க]

# செம்பியன் பற்றில் பெற்றோல் ஊறுகிறது?

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ்ப்பாணத்தின் வடபகுதியிலுள்ள செம்பியன் பற்று என்ற இடத்திலும் நிலத்தின் அடிப்பகுதியில் பெற்றோல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை தாழையடியிலிருந்து ஆறுமைல் தூரத்திலுள்ள செம்பியன்பற்றிலேயே பெற்றோல் ஊறுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் வடக்கு மாகாணத்தில் நில ஆராய்ச்சி நடத்திவரும் பிரெஞ்சு நிபுணர்களே இதனைக் கண்டுபிடித்துள்ளதாகவும், செம்பியன்பற்றில் நிலத்தின் அடியில் பதின் மூவாயிரம் அடி ஆழத்திலேயே பெற்றோல் ஊறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதுபற்றிய பூரண ஆராய்ச்சியில் இப்போது பிரெஞ்சுநிபுணர்கள் ஈடுபட்

[6-ம் பக்கம் பார்க்க]

## அவசரகாலநிலை நீடிக்கும

புதுடில்லி, ஜூன் 22
இந்தியாவின் பாதுகாப்பை முன்னிட்டும் இந்திய எல்லைப்பகுதிகளில் வெளியார் ஆக்கிரமிப்பு ஆபத்து இருப்பதைக்கருதியும்ஜூலை மாதம் முதல் திகதிக்குப் பின்னரும் இந்தியாவில் அவசரகாலநிலை தொடர்ந்திருந்துவரும் என்று உள்விவகார அமைச்சர் திரு. வை. பி. சவான் இன்று லோகசபையில் தெரிவித்தார்,

## "மாணவ ஆசிரியர் தெரிவில் அரசியல் தலையீடு கூடாது"

### சுவீகரிக்கப்பட்ட பாடசாலை தமிழாசிரியர்சங்க தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி
மாணவ ஆசிரியர் நியமனத்தில் அரசியல் தலையீடு சிறிதளவேனும் இருக்கக் கூடாது. நீதியான முறையில் நியமனம் இடம்பெற வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அகில இலங்கை சுவீகரிக்கப்பட்ட தமிழ் பாடசாலை ஆசிரியர் சங்க வருடாந்த கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

திரு. எஸ். செல்லையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது.

இடமாற்றம் சம்பள பிரச்சினை, பென்ஷன் ஆகிய வற்றை ஆராய ஆசிரிய சேவை கமிஷன் ஒன்று நியமிக்கப்பட வேண்டும். அதில் ஆசிரியர் தொழிற் சங்க பிரதிநிதிகளும் இடம் பெறவேண்டும்.

பின் தங்கிய இடங்களில் உள்ள பாடசாலைகளில், ஆசிரியர் பற்றுக்குறை உள்ளதென்பதை பாராளுமன்ற உறுப்பினர்களும், பெற்றோர் ஆசிரியர் சங்கங்களும், கல்விப் பகுதியின் கவனத்திற்கு கொண்டு வந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பின்தங்கிய இடங்களை பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர்கள் வெளியிடங்களில் உள்ள பாடசாலையில் தேவைக்கு அதிகமாக இருக்கின்றனர்.

[6-ம் பக்கம் பார்க்க]

வடபகுதி

## உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கைக்கு தேவைப்படும் உருளைக்கிழங்குகள்

யாழ்ப்பாணம், வெள்ளி
வடமாகாணத்தில் இவ்வருட உருளைக்கிழங்குப்பயிர்ச் செய்கைக்கு சுமார் 8,500 அந்தர் விதை கிழங்கு தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விதைக் கிழங்குகள் அநேகமாக அவுஸ்திரேலியா, ஒல்லாந்து ஆகிய இடங்களிலிருந்து இறக்குமதிசெய்யப்படவிருக்கிறது.

உருளைக்கிழங்குப்பயிர்ச் செய்கைக்கான விதை கிழங்கை விவசாயப் பகுதியிடமிருந்து பெறவிருக்கும் விவசாயிகள் பலநோக்குக் [illegible]றவுச் சங்கங்கள் மூலம் அந்தருக்கு 5 ரூபா வீதம் முற்பணம் கட்டி பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விதை கிழங்குக்கு விண்ணப்பிப்பவர்களின் விபரங்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் கமத்தொழில் போதனாசிரியருக்கு அடுத்த மாதம் 2-ம் திகதிக்கு முன்னர் தெரிவிக்கவேண்டும் எனவும் யாழ்ப்பாண விவசாய விஸ்தரிப்பு உத்தியோ[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

திட்டமிடுவது விஞ்ஞான ரீதியில் மேற்கொள்ளப்படும் முறையாகும். விஞ்ஞானம் நடைமுறையில் செயல்படுவதுதான் திட்டமிடுதல்.

—ஜவஹர்லால் நேரு.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க௵
ஆனி ௴ 9௳ (23-6-67)

## அமரர் ‘‘அரியம்ஜி’’

ஈழ அன்னை ஈன்றெடுத்த தவப்புதல்வர்களில் ஒருவரான ‘‘அரியம்ஜி’’ எனப்படும் திரு. ஈ. டபிள்யூ. அரியநாயகம் அவர்களின் திடீர் மறைவு, ஈழத்துக்கும், அதைவிட பாரத நாட்டுக்கும் பேரிழப்பாகும். வட்டுக்கோட்டையில் பிறந்த இப்பெரியார், இளவயதிலே பாரதநாட்டுக்குச் சென்று கவியரசர் தாகூர், மகாத்மா காந்தி, விநோபாஜி முதலியவர்களின் அன்பையும் நம்பிக்கையும் பெற்று அவர்களுடன் சேர்ந்து தேசியப் பணிகளில் ஈடுபட்டுப் பெரும் புகழ் பெற்றார். இது நம் ஈழத்துக்கு மிகப் பெருமையாகும்.

வார்தா ஆதாரக் கல்வித் திட்டத்தை வகுத்து, இந்தியாவில் கல்விச் சீர்திருத்தம் செய்யும் பெரும் பொறுப்பை ஏற்று நடத்தியதுடன், புதிய சுதந்திர பாரதத்தைக் கட்டியமைக்கும் பலபல தேசியப் பணிகளுக்காகத் தம் வாழ்க்கையையே அர்ப்பணித்த தியாக வீரர் அவர். பாரதநாடு நன்கு பயன்படுத்திக்கொண்ட இப்பெரியாரது சேவைகளை இலங்கை அரசாங்கம் ஓரளவாவது கேட்டுப் பெறாமல் இருந்துவிட்டது பெரிய துரதிருஷ்டம். அப்படிப் பெற்றிருந்தால் நாம் இங்கு கல்வி, கிராமக் கைத்தொழில் முதலியவற்றில் எவ்வளவோ பயன்பெற்றிருக்கலாம்.

இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. இந்தியாவிலே அப்பெரியார் வகுத்து நடத்திய அடிப்படைக் கல்வித்திட்டமும் கிராமியக் கைத்தொழில் இயக்கங்களும் சிறப்பாக முன்னேறியுள்ளன.

இலங்கை அரசாங்கம், இந்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு, இந்த ஆக்கப் பணிகளை இங்கும் வளர்க்க, வழிவகைகள் செய்யவேண்டும். அப்படிச் செய்வதாயின், அமரர் அரியம்ஜியின் ஆத்மாவுக்கு மிகவும் சாந்தியும் திருப்தியும் ஏற்படுவதுடன், நம் ஈழத்துக்கும் பல வகைகளிலும் நன்மை கிடைத்து, தேசிய அரசாங்கத்தின் பிரச்னைகள் பலவும் தீர வழிபிறக்கும்.

## ‘நமது தொழிற்சங்கம் இப்படித்தான் பிறந்தது’

### ஜனநாயக உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் முதலாண்டு அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் எழுதுவினைஞர்களாகிய நாம் சென்ற பல ஆண்டுகளாக உள்ளூராட்சி லிகிதர் சேவைச்சங்கத்தில் அங்கத்தவர்களாயிருந்தோம். காலியில் நடைபெற்ற மகாநாட்டில் ‘வேண்டாத’ ஒரு போக்கினால் வெளிநடப்புச் செய்தோம். எமக்கென ஒரு தொழிற்சங்கத்தை அமைத்துக்கொண்டோம்’’.

ஜனநாயக உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் முதலாவது வருடாந்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. சங்கத்தின் முதலாவது வருடாந்த பொதுக்கூட்டம் இன்று யாழ். மாநகரசபையில் நடக்கிறது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அன்று அறுபது அங்கத்தவர்களுடன் ஸ்தாபிக்கப்பட்ட எமது சங்கம் இன்று 45 உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் 160 அங்கத்தவர்களைக் கொண்டதாக வளர்ந்திருக்கிறது. இன்னும் கூடிய அங்கத்தவர்களைச் சேர்த்து எமது சங்கத்தை ஒரு பலம் பொருந்திய சங்கமாக அமைப்பதற்கு அங்கத்தவர்கள் சகலரினது ஒத்துழைப்பையும் நாடுகிறோம். உள்ளூராட்சிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்தி அமைப்பதற்கு கௌரவ உள்ளூராசி அமைச்சர் கூட்டிய மகாநாட்டில் எமது சங்கம் பதிவு பெறாத காரணத்தினால் கலந்துகொள்ள இயலாமல் இருந்தபோதிலும், எமது சங்கம் மகஜர் ஒன்றை உள்ளூராட்சி மந்திரிக்கு சமர்ப்பித்திருந்தது. மகஜரில் கோரப்பட்ட விஷயம் தற்பொழுது வெளிவந்திருக்கும் உள்ளூராட்சி சேவை மசோதாவில் சேர்க்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

O உள்ளூராட்சி சேவை அதிகாரசபை ஒரு நிரந்தர தலைவருடன் 5 அங்கத்தவர்களைக் கொண்டதாக இருக்கும். O உள்ளூராட்சி சேவை அதிகார சபையில் கடமைற்றும் சகல ஊழியர்களும் மாற்றம் செய்யப்படக்கூடியவர்களாயிருப்பர். O உள்ளூராட்சிசேவையில் கடமையாற்றும் ஊழியர்களின் இடமாற்றங்களைக் கவனிப்பதற்கு ஒரு இடமாற்றச்சபை அமைக்கப்படும். O உள்ளூராட்சி சேவையிலிருக்கும் எந்த ஒரு ஊழியரினது பதவியையும் உள்ளூராட்சி அமைச்சரின் அதிகாரமில்லாது நசுக்குவதற்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரமில்லை.

**பிரேரணைகள்**

இன்று கூட்டத்தில் பிரேரிக்கப்படவிருக்கும் சில பிரேரணைகள் வருமாறு:

O தமிழ்மொழி விசேட விதிகள் மசோதாவில் தமிழ் பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு தமிழ் மொழியில் நிர்வாகம் நடத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே தமிழ்மொழியைக் காப்பதற்கும் தமிழ்ப் பிரதேசங்களில் எமது உத்தியோக வாய்ப்புக்களை இழக்காமல் இருப்பதற்குமாக இச்சங்கம், தமிழ்பிரதேச உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களையும் அங்கு கடமையாற்றும் எழுதுவினைஞர்களையும் தமிழிலேயே தமது கடமைகளை ஆற்றுமாறு கேட்டுக்கொள்கிறது.

O 55 வயது வந்த ஊழியர்கள் சிங்கள மொழியில் தேர்ச்சியடையாத காரணத்திற்காக பதவி நீடிட்பு மறுக்கப்படுவதை இச்சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன், அத்தகைய நிபந்தனையை நீக்கி பதவி நீடிக்க வழிவகுக்கும் முறையில் சற்றறிக்கை விடப்படவேண்டுமென இச்சங்கம் உ. ஆ. சே. அ. சபையைக்கேட்டுக் கொள்கின்றது.

## முகம் மதலி

உலக அதிபார குத்துச் சண்டைவீரனான காஸியஸ்கிளே எனும் முகம்மதலிக்கு அமெரிக்க நீதிமன்றம் ஒன்றுஐந்துஆண்டுச் சிறைத்தண்டனையும் பத்தாயிரம் டாலர் அபராதமும் விதித்திருக்கிறது. வியட்னாமில் போர் புரிவதற்காக அமெரிக்க இராணுவத்திற் சேர வேண்டுமென பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்குப் பணிய மறுத்ததற்காக அவருக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

வியட்நாமுக்கு அமெரிக்கா தனது படைகளை அனுப்புவதும் அங்கு வியட்நாம் மக்களுக்குஎதிராக போர் புரிவதும் சரியாதவறாஎன்பதுவேறு விஷயம். அமெரிக்கா தனது‘கடமைகளை’ நிறைவேற்றுவதற்கு எடுக்கும் நடவடிக்கைகளில், அதன் சட்டதிட்டங்களை மதித்து நடக்கவேண்டியதும் அமெரிக்காவின் மதிப்பையும்கௌரவத்தையும் பாதுகாக்க முன்வரவேண்டியதும் அமெரிக்க மக்களின் தேசீய கடமையும் பொறுப்புமாகும்.

ஆனால் அமெரிக்காவில் எல்லோருக்கும் கட்டாய இராணுவசேவை இருப்பதாகத் தெரியவில்லை. முகம்மதலியைவிட இன்னும் பலர் அங்கிருக்கின்றனர். அவர்களை விடுத்து அமெரிக்காவுக்கு தமது ‘‘பலம்வாய்ந்த குத்துகளினால்’’ பெருமையையும் பெரும் வருமானத்தையும் தேடித் தருபவரும் உலக மக்களின் அபிமானத்தைப் பெற்றுள்ளதருயான முகம்மததலியை இராணுவத்தில் சேர்த்து வியட்னாமில் பலிகொடுக்க அமெரிக்க அரசாங்கப் பிடிவாதம்செய்வதுதான் ஏன் என்று தெரியவில்லை.

முகம்மதலி இத்தண்டனையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் அப்பீல் செய்யவிருக்கிறார். அப்பீல் நீதிமன்றம் எப்படித் தீர்ப்பளிக்கிறதோ தெரியவில்லை. அதுவரைக்கும் கூட பொறுத்திருக்காமல் முகம்மதலிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ரத்துச்செய்து, அவரை இராணுவத்தில் சேர்க்கவேண்டும் என்ற பிடிவாதத்தையும் விடுத்து அமெரிக்க அரசாங்கம் அவருக்கு விடுதலை அளிக்கவேண்டும். இல்லையேல் வியட்னாமில் அமெரிக்கா ஆழந்தெரியாமய் காலை விட்டு அவதிப்படுவதைவிட முகம்மதலிக்கு அநீதி இழைத்துவிட்ட பெரும் பழியை ஏற்கநேரும். பெரும் பிரச்னைகளையும் சமாளிக்க நேரிடலாம்.

## ‘‘விரு பிறலும் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. எஸ். செல்லையா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. முருகேசம்பிள்ளை மேலும் கூறியதாவது:-

56 ம் ஆண்டுக்குமுன் இங்குள்ள ஒவ்வொரு தமிழ்ப் பாடசாலையிலும் இரண்டு மூன்று சிங்கள ஆசிரியர்கள் கடமையாற்றினார்கள். தமிழ்ப் பிள்ளைகள் 8-ம் வகுப்பு வரை சிங்களம் படித்தனர், ஆனால் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேறிய பின் தமிழ் மக்கள் எதிர்ப்பைக் காட்டும் விதமாக சிங்களம் படிப்பதை நிறுத்தினார்கள். கடந்த 10 வருடங்களாக தமிழ்ப்பகுதிகளில் சிங்களம் புறக்கணிக்கப்பட்டுவந்தது. சென்றவருடம் நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி அமுல் மசோதாவை தமிழ்த் தலைவர்கள் ஆதரித்ததன் மூலம், சிங்களத்தையும் அகில இலங்கையிலும் அரசகரும மொழியாக ஏற்றுள்ளனர். ஏனெனில், தமிழ் மொழி அமுல் மசோதாவின் முதல்வசனத்தில் அகில இலங்கையிலும் சிங்கள மொழி அரசகரும மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ஆதலால் இனிமேலும் சிங்களத்தைப் புறக்கணிப்பது தமிழ்மக்களுக்கு நல்லதல்ல.

சிங்களத்தைப் படித்தால் சிலாபம், புத்தளம், நீர்கொழும்பில் நடந்ததுபோல யாழ்ப்பாணத்திலும், தமிழர்கள் சிங்களவர்களாக மாறிவிடுவார்கள் என சிலர் தவறான பிரசாரம் செய்து வருகின்றனர். தெஹிவலை, அம்பலாங்கொடை, பலாங்கொடையில் போத்துக்கீசரால் கறுவா உடைப்பதற்கு கொண்டுசெல்லப்பட்ட தமி[illegible] சிங்களவராக நாளடைவில் மாறியதற்குக் காரணம் அவர்கள் தங்கள் சமயத்தைக் கைவிட்டது தான். யாழ்ப்பாணத் தமிழர் சமயத்தைக் கைவிடாமலிருந்தால் தமிழும் அழியாமலிருக்கும்.

‘‘தமிழைத் தா’’ என்று அரசாங்கத்தைக் கேட்பதில் பயனில்லை. சாவித்திரி யமதர்மனிடம், தனது கணவன் சத்தியவானின் உயிரைக் கேட்டாள். அப்பொழுது யமதர்மன் உயிர் தரமுடியாது வேறு வரம் கேள் என்றான். உடனே சாவித்திரி ‘பிள்ளைவரம் வேண்டும்’ என்றாள். யமன் வேறுவழியின்றி சத்தியவானின் உயிரைக் கொடுத்தான். அதேபோல், தமிழ் தலைவர்களும் ‘தமிழ் மொழியைத் தா என்று கேட்காமல், சைவத்தைத் தா என்று கேட்டால் தமிழ் மொழியும் அதன்மூலம் கிடைக்கும். சைவம்தான் தமிழ். தேவாரம், திருவாசகம் தமிழில்தான் உண்டு. அதை வேறுமொழியில் மொழி பெயர்க்க முடியாது. ஆதலால் நாங்கள் சைவத்தைப் பாதுகாத்தால், தமிழும் பாதுகாக்கப்படும். ஆதலால் சிங்களம் படித்தால் சிங்களவராக மாறிவிடுவோம் எள்பது தவறு,

தமிழர்கள் சிங்களம் படிப்பதை ஏன் தடைசெய்ய வேண்டும்? பெற்றோர் என்ற முறையில், எனது கொள்கை, தமிழர் ஒவ்வொருவரும் சிங்களம் படிக்கவேண்டுமென்பதே. தருணத்தை உபயோகித்து இனிமேல் தமிழ்ப்பிள்ளைகளும் சிங்களம் படிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ்மொழி அமுல் மசோதாவினால் ஒரு பயனுமில்லை. அது ஒரு உயிரற்ற சட்டம்.

[6-ம் பக்கம் பார்க்க]

## ஐயாறன் எழுதுவது

வட்டுக்கோட்டையிலே ‘‘அரியம்ஜி’’ அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்த ஓர் அன்பருடன் சென்றிருந்தேன். பெட்டியில் வைக்கப்பட்டிருந்த அப்புனித சடலத்தைப் பார்க்கையில் ஆஜானபாகுவான அவர் கம்பீரமாகத் தூங்குவது போலவே இருந்தது. செத்துவிட்டதாகக் கூறவே முடியாது. சுத்தக் கதருடையிலே அவரது தோற்றத்தைக் காண பல பெரிய இந்திய தேசியத் தலைவர்களின் நினைப்பே வந்தது.

ஃ ஃ ஃ

கொழும்பு ஆஸ்பத்திரியிலே சிகிச்சைபெற்று வந்த அவரது சகோதரரைக் காணவே, தமது மனைவியார் ஆஷாதேவியுடன் அவர் வார்தாவிலிருந்து பறந்து வந்தார். தம்பியாரைப் பார்த்துவிட்டு, வட்டுக்கோட்டையில் தாம் பிறந்த வீட்டுக்கு வந்து தங்கியதும் ‘‘கடைசியாக என் சொந்த வீட்டுக்கே வந்துவிட்டேன்’’ என்று மகிழ்ச்சியுடன் பலருடனும் பேசிக் கொண்டிருந்தார். வழக்கம்போல் இரவிலே வெளியில் படுத்துத் தூங்கினார். இரவு 3 மணிக்கு ஏதோ நெஞ்சில் வலிப்பதாயும் தண்ணீர் வேண்டுமென்றும் கேட்டார். மனைவியார். தண்ணீர் கொடுத்ததும், கண்ணை மூடினார். தூங்குவதாகவே நினைத்தார் மனைவியார். டாக்டரை அழைத்துக் காட்டியபின்தான் உயிர்போய் விட்டது தெரியுமாம். அவ்வளவு அனாயாசமான நல்ல மரணம்!

இந்தியா சென்று, இந்தியப் பெண்ணை மணந்து, அங்கேயே வாழ்ந்து வந்த அவர் பலவருடங்களுக்குப் பின் கடைசியிலே தம் ஊருக்கு, தாம் பிறந்த வீட்டுக்கே வந்து உயிர் பிரிவதெனின் அது வியப்பாக இருக்கிறதல்லவா? இதில் ஏதோ விசேஷம் இருக்கத்தான் வேண்டும். மேலும் நமது டாக்டர் சண்முகரத்னத்தார் மறைந்த புண்ணிய திதியிலேயே இவரும் மறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஃ ஃ ஃ

மேகங்கள் வெயில் படாமல் குடைபிடிக்க, அமைதியான புனித சூழ்நிலையிலே இறுதி அஞ்சலி நடைபெற்றது. அங்கு கூடியிருந்த பல அன்பர்கள் ‘அரியம்ஜி’ யைப் புகழ்ந்து பல ருசியான அனுபவங்களைப்பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

வங்காளத்திலே அவர் தாகூரின் காரியதரிசியாக இருக்கையில் இலங்கையிலிருந்து சில நண்பர்கள் அவரிடம் சென்று ‘‘அரியம்! உயர்ந்த கல்வித் திறமை பெற்ற நீங்கள் இங்கிருந்து ஏன் இப்படிக் கஷ்டப் படுவான். இலங்கைக்குவந்தால், கல்வித்துறையிலே இன்ஸ்பெக்டராகவும் வந்து நல்ல சம்பளம் எடுக்கலாமே’’ என்று ‘யோசனை’ கூறினார்களாம். உடன்அவர்களுக்குக் கன்னத்தில் அறைந்ததுபோல் அரியம்ஜி பதில் அளிக்கவே அந்தப் பேச்சையே பிறகு யாரும் எடுக்கத் துணியவில்லையாம்.

ஃ ஃ ஃ

இதைக் கேட்டதும் பெரியார் அரியநாயகம் ‘‘ரீடர்ஸ் டைஜஸ்டில்’’ வெளியான கீழ்க்கண்ட ஒரு குட்டிக் கதையைச் சொன்னார்.

‘‘இரு பீப்பாய்களில் நண்டுகளை நிறைத்து, ஒரு லொறியில் மார்க்கெட்டுக்கு விற்பனைக்காகக் கொண்டு சென்றார்களாம் ஒரு பீப்

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘அரபுபிராந்தியங்களிலிருந்துதனதுதுருப்புகளை இஸ்ரேல் உடன் வாபஸ் பெற வேண்டும்’

## ஐ. நா. பொதுச்சபை அவசர கூட்டத்தில் இந்திய வெளியுறவு மந்திரி சாக்ளா

நியுயோர்க், ஜூன் 22

**அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் உடனடியாகத் தனது துருப்புகளை வாபஸ்பெற வேண்டுமென்று இந்தியா, ஐ. நா. பொதுச்சபை அவசர கூட்டத்தில் கூறியுள்ளது,**

**மேற்கு ஆசிய விவகாரத்தின் மத்திய பிரச்னை இது தானென்றும், இஸ்ரேல் தனது துருப்புகளை வாபஸ் பெறும்வகையில் ஐ. நா. பந்தோபஸ்து சபை அவசர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய வெளிவிவகாரமந்திரி திரு சாக்ளா, மேற்கு ஆசிய நிலைமைபற்றிய ஐ. நா. பொதுச்சபையின் அவசரக் கூட்ட விவாதத்தில் பங்குபற்றிப் பேசுகையில் வலியுறுத்தினுர்.**

இஸ்ரேஸ் ருப்புகள் அரபுப் பிராந்திங்களிலிருந்து எவ்வித நிபந்தனையுமின்றி, உடனடியாக வெளியேற வேண்டுமென்று அவர் குறிப்பிட்டார்.

**‘முதல் தாக்கியது இஸ்ரேலே’**

மேற்கு ஆசியப் போரில் இஸ்ரேலே முதலாவது தாக்குதலைச் செய்திருக்கின்றது என்பது கண்கூடு. அப்படியிருக்க, இஸ்ரேல் தனது துருப்புகளை வாபஸ் செய்ய மாட்டாது என இஸ்ரேல் வெளிவிவகார மந்திரி திரு. எபான் கூறியிருப்பதை திரு சாக்ளா கண்டித்தார்.

இஸ்ரேல் தனது துருப்புகளை உடனடியாக வாபஸ் செய்ய வேண்டுமென்று கோரும் சோவியத் தீர்மானத்தை இந்தியா பூரணமாக ஆதரிப்பதாக திரு. சாக்ளா அறிவித்தார்.

**ஐ. நா. உதாசீனம்**

‘இஸ்ரேலின் நடவடிக்கை ஐ. நா. சபையையும், ஐ. நா. பொதுக் காரியதரிசியுதாண்டையும் உதாசீனம் செய்யும்வகையில் அமைந்துள்ளது. ஆக்கிரமிப்பை நடத்திவிட்டு ஐ. நா. பொதுக் காரியதரிசியைக் கண்டிக்கவும் இஸ்ரேல் முற்பட்டுள்ளது. இது வன்மையான கண்டனத்துக்குரியதாகும். இந்தியா ஐ. நா. பொதுக் காரியதரிசியின் பின்னுலேயே நிற்கிறது.’ இவ்வாறு கூறினுர் திரு. சாக்ளா.

அவர் மேலும் பேசுகையில், ஆக்கிரமிப்பு மூலம் பெறப்படும் பயன்களை ஆக்கிரமிப்பாளர் எவராஞலும் சரி, தம்மிடம் வைத்திருப்பதை சபை அனுமதிக்க முடியாதெனக் கூறினுர்.

‘தனது பாதுகாப்புக்கு ஆபத்து என்ற ஒரே காரணத்திற்காக, எந்த நாடும் ஆக்கிரமிப்பில் இறங்குவது நியாயமானதல்ல. பிராந்திய எல்லைகள் சம்பந்தமான பிரச்னைகளையோ, வேறு பிரச்னைகளையோ ஆயுதந்தாங்கிய பலாத்கார நடவடிக்கைமூலம் திர்க்க முற்படுவதையும் சபை ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படி முயல்வது, இச்சபையின் இலட்சியங்களுக்கும் நோக்கங்களுக்கும் முரணுனதாகும்.’

**விசேஷ பிரதிநிதி அனுப்ப ஆதரவு**

இவ்வாறு குறிப்பிட்ட திரு. சாக்ளா, மேற்கு ஆசியாவில் ஐ. நா. மேற்பார்வைக் கமிஷன் விஸ்தரிக்கப்பட்டு, அங்குள்ள எல்லைகளைப் பாதுகாக்கும்வகையில் பலப்படுத்தப்பட வேண்டுமென்ற ஆலோசனையை இந்தியா ஆதரிப்பதாகக் கூறினுர். ஐ. நா. வின் விசேஷ பிரதிநிதி ஒருவரை மேற்குஆசியப் பகுதிக்கு அனுப்பி வைப்பது வரவேற்க வேண்டிய யோசனை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்பிரதிநிதி, மேற்கு ஆசிய எல்லைகளைப் பாதுகாப்பதற்கான உறுதியான வழிவகைகளை ஆராய்வதுடன், இஸ்ரேல் கைவசமுள்ள அரபுப் பிராந்தியங்களில் வதியும் அரபு மக்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் திரு. சாக்ளா சபையைக் கேட்டுக் கொண்டார்.

**பிரிட்டிஷ் கோரிக்கை**

முன்னதாக பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி திரு. ஜோர்ஜ் பிரவுண் பேசுகையில, மேற்கு ஆசியாவில் சமாதானத்தை நிலைநாட்ட உடனடியாக ஐ. நா. சமாதானப் பிரதிநிதி ஒருவரைஅங்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று கோரினுர். அத்துடன் ஐ. நா. இராணுவப் பிரிவொன்று புதிய வடிவத்தில் அங்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். ஜெருசலத்தின்ஜோர்தான் பகுதியிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டுமென அவர் இஸ்ரேலைக் கேட்டுக் கொண்டார்.

அடுத்துப் பேசிய டானிஷ் பிரதமர் திரு. கிராக், பிரிட்டனின் ஆலோசனையைத் தமது நாடு ஆதரிப்பதாகத் தெரிவித்தார். மேற்கு ஆசியாவுக்கு அனுப்பப்படும் ஐ. நா. இராணுவப்படையில் தமது நாட்டுத் துருப்புகளும் சேவை செய்யத் தயார் எனவும் அவர் கூறினுர்.

**ஐ அ. கு. நிராகரித்தது**

ஐ. அ. குடியரசின் உதவிப் பிரதமர் டாக்டர் முகம்மது பாஸி பேசுகையில், மூன்ருவது கட்சி ஒன்றின் கூட்டுடன் அரபுநாடுகள் இஸ்ரேலுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடாத்த வேண்டுமென்ற அமெரிக்க ஆலோசனையை நிராகரித்தார். ‘அத்தகைய பேச்சுவார்த்தைகளை அரபு நாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாது’’ என்ருர் அவர். இஸரேல் உடனடியாகத் தனது துருப்புக்களை அரபுப் பிராந்தியங்களிலிருந்து வாபஸ்பெறவேண்டுமென்ற சோவியத் தீர்மானத்தையே தமது நாடும் ஆதரிப்பதாக அவர் அறிவித்தார்.

மேற்கு ஆசியப் போரில் அமெரிக்க, பிரிட்டிஷ் கப்பல்களும் பங்குபற்றின என்ற குற்றச்சாட்டை அவ்விருநாடுகள் மீதும் அவர் மீண்டும் சுமத்தினுர்.

**‘இஸ்ரேல் [illegible]’**

இஸ்ரேல் வெளியுறவு மந

## இந்திய விமானத்தை அனுமதிக்க முடியாது

### சீனு அறிவிப்பு

புதுடில்லி, ஜூன் 22

சீனுவுக்குள் இந்திய விமானத்தை அனுமதிக்க முடியாது எனச் சீனு, இந்தியாவுக்கு அறிவித்துள்ளது.

இந்தியத்தூதரக சிப்பந்திகளைக் கொண்டுவரச் சீனுவுக்கு இந்திய விமானத்தையும். இந்தியாவிலுள்ள சீனத் தூதரகச் சிப்பந்திகளை ஏற்றிச்செல்லஇந்தியாவுக்குச் சீன விமானத்தையும், பரஸ்பரம் அனுப்ப இந்தியா உடன்பட்டிருந்தது.

ஆனல், சீனுவின் புதிய அறிவிப்பின் விளைவாக சீனுவின் விமானத்தை அனுமதிப்பதென்ற தனது முந்திய முடிவை இந்தியா ரத்துச்செய்து விட்டது.

பீகிங்குகுச் செல்வதற்கெனஹொங்கொங் புறப்படவிருந்த இந்திய சிவில் விமானத்தின் பிரயாணமும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

பரஸ்பரம் இரு நாடுகளினதும் சிவில் விமானங்கள் செல்வதற்குச் சீனு ஒப்புக் கொண்டால், இந்தியாவும் சீன விமானம் வருவதற்கு அனுமதிக்குமென இந்தியா தெரிவித்துள்ளது. இந்த உடன்படிக்கைக்கான சம்மதம், 60 மணித்தியால முன் அறிவித்தலுடன் தெரிவிக்கப்பட வேண்டுமென்றும் இந்தியா குறிப்பிட்டுள்ளது.

**சீன பிரதிநிதி விவகாரம்**

இந்தியாவிலுள்ள சீனத் தூதரகத்தைச் சேர்ந்த முதலாவது காரியதரிசியை நாடு கடத்தும் இந்திய அரசாங்கத்தின் உத்தரவுக்குச் சீனத் தூதரகம் இன்னும் பணியாததையிட்டு இந்திய வெளிவிவகார அமைச்சு, சீனத்தூதரகப் பொறுப்பதிகாரியிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

அவருக்குக் கொடுக்கப்பட்ட ஆட்சேபக் குறிப்பில், அண்மையில் சீனத்தூதரகத்துக்கு முன்னுல் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது ஏற்பட்ட காயங்களினுற்ருன் சீனத்தூதரக முதற் காரியதரிசியின் பிரயாணம் தாமதிக்கப்படுவதானுல், அவரை வெலிங்டன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்க இந்தியா வசதிசெய்து [illegible] முன்வருவதாகவும் [illegible] பிடப்பட்டுள்ளது.

## ரஷ்யஅதிபர் பொட்கர்னியும் நாஸரும் சந்தித்து பேசினர்

கெய்ரோ, ஜூன் 22

இங்கு வந்துள்ள ரஷ்ய அதிபர் திரு. பொட்கர்ணியும், ஐ. அ குடியரசுத் தலைவர் திரு. நாஸரும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துள்ளனர்.

ரஷ்ய அதிபரும். நாஸரும் நடத்தும் இப்பேச்சுவார்த்தைகளில் ரஷ்ய இராணுவத் தளபதி திரு. ஷக்கரோவும் கலந்துகொண்டுள்ளார்.

மேற்கு ஆசியப் போரில் ஐ, அ. குடியரசு இழந்த ஆயுதங்களுக்குப் பதிலாகப் புதிய ஆயுதங்களை அளிக்க ரஷ்யா சம்மதித்துள்ளது.

இப்புதிய ஆயுதங்களுக்கு ஐ. அ. கு. விடம் பணம் எதுவும் ரஷ்யா கேட்காது.

## சீன - இந்திய உறவுகள் பரிசீலனை

### இந்திய காங்கிரஸ் கட்சி முடிவு

புதுடில்லி, ஜூன் 22

சீனுவுடனுன உறவுகள் பற்றிப் பூரணமாக விவாதிப்பதென இந்தியக் காங்கிரஸ் கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்று, புதுடில்லியில் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்த ஆலோசனை தெரிவிக்கப்பட்ட போது, பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமது சம்மதத்தைத் தெரிவித்தார்.

சீனுவிலுள்ள இந்தியத் தூதரக முற்றுகை, ஒரு பெரிய திட்டத்தின் அம்சமே என்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

புதிதாகத் தோன்றியுள்ள சர்வதேச நிலைமையின் பின்னணியில், அண்மையில் சீனு ஜலவாயுக் குண்டை வெற்றிகரமாக வெடித்துள்ளதையும்கருத்திற்கொண்டு சீனுவுடன் இந்தியா அனுஷ்டிக்கவேண்டிய உறவுமுறைகள் இவ்விவாதத்தில் பரிசீலனைசெய்யப்படும்.

## சோவியத், கி. ஐரோப்பிய தலைவர்கள் வெளிநடப்பு

### பீகிங் வரவேற்பு விழாவிலிருந்து

பீகிங், ஜூன் 22

பீகிங்கில், ஸாம்பியா அதிபர் டாக்டர் கென்னத் கவுண்டாவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரம் ஒன்றிலிருந்து சோவியத் ரஷ்யா, மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்தனர்.

அரபு நாடுகளுக்கு எதிரான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் அமெரிக்கா, பிரிட்டனுடன் ரஷ்யாவும் ஒத்துழைத்தது என, சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் குற்றஞ் சாட்டியதைத்

திரி திரு. எபான் பேசுகையில், ஜெருசலத்தின் பிராந்திய ஒருமைப்பாட்டை இஸ்ரேல் பாதுகாக்க விரும்புவதாகவும், ஜோர்தான் பகுதியிலிருந்து இஸ்ரேல் வாபஸ்பெறமாட்டாது என்றும் உறுதியாகக் கூறினுர். இஸ்ரேல், ஜெருசலத்தின் ஜோர்தான் பகுதியிலிருந்து வெளியேற வேண்டுமென்ற பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி திரு. பிறவுணின் ஆலோசனைக்குப் பதிலாக இது அமைந்திருந்தது.

கனடா வெளிவிவகார மந்திரி திரு. போல் மார்டின், ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினைச் சந்தித்துப் பேசினுர். பின்னர் பத்திரிகையாளரிடம் பேசுகையில், அமெரிக்க ஜனுதிபதி திரு. ஜோன்சனைச் சந்திக்கும் சந்தர்ப்பத்தை தவற விட்டுவிட வேண்டாமென்று தாம் பிரதமர் திரு கொஸிஜினிடம் வலியுறுத்தியதாக அவர் தெரிவித்தார்.

ஐ. நா. சபைக் கூட்டத்துக்கு வந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள், இங்கு ஒன்றுகூடி, மேற்கு [illegible] நிலைமையை விவாதித்தனர்.

தொடர்ந்தே பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்தனர்.

‘‘ஓர் உலகச் சதியில் அமெரிக்காவும். ரஷ்யாவும் ஈடுபட்டுள்ளன’’ என்று அவர் மேலும் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

## இரண்டரைலட்சம் உணவுதான்யம்

### சூயஸ்கால்வாயில் தடுக்கப்பட்டுள்ளது

புதுடில்லி, ஜூன் 22

சூயஸ்கால்வாய் மூடப்பட்டுள்ளதால், இந்தியாவுக்கு வரவேண்டிய சுமார் 2 லட்சத்து 50,000 தொன் உணவுதான்யங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக இந்திய மத்தியஉணவு மந்திரி திரு. ஜகஜீவன்ராம் தெரிவித்துள்ளார். இந்தநிலைமை அடுத்தமாதம் நடுப்பகுதி வரைக்கும் நீடிக்குமென அவர் மேலும் கூறினுர்.

## அணு குண்டும் இந்தியாவும்

புதுடில்லி, ஜூன் 22

சீனுவின் ஜலவாயு குண்டுப் பரீட்சை இந்தியாவுக்குக் கவலையளித்திருப்பதாகவும் நிலைமையை இந்தியா ஆழ்ந்த கவனத்துடன் பரிசீலனை செய்துவருவதாகவும் இந்திய பாதுகாப்பு மந்திரி தெரிவித்தார். இந்தியா தனது அணு ஆயுதக் கொள்கையைமாற்றிக் கொள்ளவேண்டுமென பார்லிமெண்ட் அங்கத்தினர் பலர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கரணவாயில் கலவரம் ஓய்ந்தது

## பிரமுகர், பொலிஸார் தலையிட்டு சமரசமாக தீர்த்து வைத்தனர்

— நமது நிருபர் ஜே. ஜெயக்குமார் —

உடுப்பிட்டி, வியாழன் கரணவாயிலுள்ள புருப்பொறுக்கி, குஞ்சர்கடை ஆகிய இரு இடங்களிலும் ஒருமாதகாலமாக இரு பிரிவினரிடையே நடந்துவந்த சச்சரவு பிரமுகர்கள் சிலரின் தலையீட்டினால் பொலிஸாரின் உதவியுடன் சமரசமாகத் தீர்க்கப்பட்டது.

சென்றமாதம் இருவகுப்பைச்சேர்ந்த இருவர் வாக்குவாதப்பட்டதைத் தொடர்ந்து இருபிரிவினரிடையேயும் தகராறு மூண்டது. சென்றவாரம் நெல்லியடியில் படம் பார்த்துவிட்டு வந்த இரு பிரிவு இளைஞரிடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றிக் கைகலப்பாக மாறி ஒருவர் காயமுற்றதால் ஆவேசம் கொண்ட இருபிரிவினரும் நேரடியாக மோதிக்கொண்டதனால் இக்கலவரம் மூண்டது. சிலர் காயமடைந்தனர்.

இருபிரிவினரும் வீதிகளில் ஆயுதங்களுடன்நின்று ஒருவர் மதுபகுதிக்குமற்றவர்செல்ல முடியாதபடி முற்றுகையிட்டிருந்தனர். இந்நிலைமையினால் மோசமான விளைவுகள் ஏற்படலாம் என அஞ்சிய பொதுமக்கள் பொலிஸாருக்கு புகார்செய்ததைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிஸார் ஸ்தலத்தில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருந்தனர். இருந்தபோதிலும் சிறுசிறு அசம்பாவிதங்கள் நிகழ்ந்து வந்ததினால் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கலவரப்பகுதிக்கு விசேஷ பொலிஸ் படையை அனுப்பியிருந்தார். ஆனாலும், இரு பிரிவினரும் கோஷ்டியாக மோதக்கூடிய கொந்தளிப்பான நிலை உருவாகுவதை அவதானித்த கரவெட்டியைச் சேர்ந்த முன்னாள் உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. வி. கே. ஆறுமுகமும் வேறு சில பிரமுகர்களும் இருபிரிவினரிடமும் சென்று ஒற்றுமையாகுமாறு வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து இருதரப்பினரும் சம்மதமளித்தனர். இதனைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில், பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையா முன்னிலையில் இருதரப்பினரையும் கொண்ட ஒரு சமரசக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் உடுப்பிட்டி கிராம சபை உப-தலைவர் திரு. வி. சோமசுந்தரம், முன்னாள் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன். திரு. வி. கே. ஆறுமுகம், கி. ச. உறுப்பினர்களான திருவாளர்கள் செ. திருநாவுக்கரசு, கே. அப்புக்குட்டி, மற்றும் திரு. கே. வல்லிபுரம், திரு. ஜே. எஸ். சுந்தரம் உட்பட வேறு பல பிரமுகர்களும் சமுகமளித்திருந்தனர். திரு. சுந்தரம் கலந்துகொண்டதை திரு. கே. வல்லிபுரம் ஆட்சேபிக்கவே சுந்தரம் கூட்டத்தை விட்டு வெளியேறினர்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையாவின் புத்திமதிகளைத் தொடர்ந்து இருதரப்பினரும் சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர்.

## கிணற்றுள் விழுந்து மாணவன்மரணம்

சங்கானை, வியா.

அராலிதெற்கைச் சேர்ந்த வரும்யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயின்றுவந்தவருமான 18வயதுடைய கணபதிப்பிள்ளை கனகலிங்கம் என்றஇளைஞர் நீர் இறைப்பதற்காகசென்றபோதுகிணற்றுள் விழுந்து மரணமானர்.

இவர் கிணற்றுள் தத்தளித்துக்கொண்டிருந்ததை அவதானித்தவர்கள் வெளியே தூக்கி வட்டுக்கோட்டைஅரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றபோது அங்கேமரணமாகியதாக அறிவிக்கப்பட்டது.

இவரதுமரணம் சம்பந்தமாக மரணவிசாரணை நடத்தியமரணவிசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் நீரில் மூச்சுத்திணறியதால் ஏற்பட்டமரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## சிறந்த விவசாயக் கழகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்-வலிகாமம் கிழக்குப் பிரிவில் 1967ம் ஆண்டின்சிறந்த இளைஞர் விவசாயக் கழகப்போட்டியில் கோப்பாய் வடக்கு அம்பாள் இளைஞர் விவசாயக்கழகம் சிறந்தவிவசாயக்கழகமாகவும் திரு. சீ. தி. அரசபிள்ளை சிறந்தஇளம் விவசாயி ஆகவும், திரு. வே. கந்தசாமி சிறந்த உ. மேற்பார்வையாளராகவும் திரு. எஸ் ஆலாலசுந்தரம் சிறந்த கி. போதனாசிரியராகவும்வடபகுதி விவசாய இலாகாவினரால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# சோவியத் தூதரகத்துக்கு துப்பாக்கி, வாளுடன்சென்றர்!

## உள்ளே பிரதமர் கொஸிஜின்

நியூயோர்க், ஜூன் 22

நியூயோர்க்கிலுள்ள சோவியத் தூதரகக் காரியாலய வாசலில் வைத்து கைத்துப்பாக்கியும், வாளும் வைத்திருந்த ஒரு நபர் கைதுசெய்யப்பட்டார். நியூயோர்க் பொலிஸாரும் தூதரக அதிகாரிகளும் அவரை வளைத்துப் பிடித்துக்கொண்டனர்.

உள்ளே ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின், தூதரக அதிகாரிகளுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்,

இந்த நபர், எப்படியோ வாயலில் நின்ற பொலிஸ்காரரையும் தாண்டி. தூதரகத்தின் கதவருகே வந்துவிட்டார். அங்கு பொருத்தியிருந்த பொத்தானை அவர் அழுத்தும்போது அவர் கைதுசெய்யப்பட்டார்.

இவருடைய பெயர் மைக்கேல் நத்தாலியாகும். வேறு விபரங்கள் இதுவரை தெரியவில்லை

# கீரை, முசுட்டை, முருங்கை இலைகளையே உண்ணுங்கள்

## பருத்தித்துறை எம். பி. கூறுகிறர்

உடுப்பிட்டி, வியா.

''நாட்டிலே உணவுப் பற்றுக்குறை நிலவிவரும் இச்சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டும். விலை குறைந்த சத்துள்ள உணவுகளை நாம் உண்ணவேண்டும். உணவுப் பிரச்னையைச் சமாளிக்கும் திறமை எமக்கிருக்கவேண்டும். கேக், பிஸ்கட் முதலிய விலை கூடிய உணவுகளை உண்பதை விட்டு எமது நாட்டு உணவு வகைகளான கீரை, முசுட்டை, முருங்கையிலை போன்றவைகளை உபயோகிக்கவேண்டும். இதனால் எமது அன்றாட வாழ்க்கையில் பயனடைவதோடு செலவையும் மிச்சப்படுத்தலாம் ''

இவ்வாறு பருத்தித்துறை எம். பி திரு. கே. துரைரத்தினம் வடமராட்சி இந்து மகளிர் ஆங்கிலக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வடமராட்சி சுகாதார வார இறுதி விழாவில் பேசுகையில் கூறினர். இக்கூட்டத்திற்குப் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு ந. நடராசா தலைமை தாங்கினர்.

வடமராட்சி சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எம். அருளம்பலம் பேசுகையில் நோயாளர்கள் டாக்டர்களுடன் ஒத்துழைக்கவேண்டும் என்றர்.

டாக்டர் திரு அருளம்பலம் உட்பட வேறு பலரும் பேசினர்.

சுகாதார விழா பற்றி நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வருமாறு-

பேச்சு- பருத்தித்துறை கத்தோலிக்க பாடசாலை, பாட்டு- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, நடனம்- கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி, நாடகம்- கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.

இப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு யாழ். மாவட்ட சௌக்கிய உதவி அத்தியட்சகரின் பாரியார் திருமதி பீ. இரத்தினசபாபதி பரிசில்கள் வழங்கினர்.

## உரும்பராய் ஞான வைரவர் கோவில் சங்காபிஷேக

உரும்பராய், வெள்ளி

இன்றும், நாளையும் உரும்பராய் ஞானவைரவசுவாமி கோவிலில் விபூதி, சந்தன அபிஷேகமும், நாளை சனிக்கிழமை பகல் சகஸ்ர சங்காபிஷேகமும், இரவு திருவுலாவும் நடைபெறும்.

## அந்தோனியார் விழா

மானிப்பாய், வெள்ளி

மானிப்பாய் அர்ச். அந்தோனியார்திருவிழாசென்ற 16-ம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கி நேற்று காலை 7 மணிக்கு பாடற்பூசையுடன் திருச்சொரூப சுற்றுப்பிரகாரமாகி இனிது முடிந்தது. கட்டளைக்குரவர் வண. லெபோன் அவர்கள் ஆராதனை நடத்தினர்கள்.



உரும்பராய் ப. ச.

## 2-ம் வட்டார அங்கத்தவர்

உரும்பராய், புதன் பட்டினசபை அந்தஸ்து பெற்றிருக்கும் உரும்பராய் 2-ம் வட்டார அங்கத்தவராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு. வ. நடேசலிங்கம். உரும்பராய் தமிழரசுக் கிளைத் தலைவரான இவருக்கு அண்மையில் அரசாங்கம் ஜே. பி பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

## துன்புறுத்தப்பட்ட தூதரக அதிகாரிகள் எம். பி. க்கள் வரவேற்பு

புதுடில்லி, ஜூன் 22

சீனவில் துன்புறுத்தப்பட்டு, இப்போது இந்தியா திரும்பியுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் திரு. ரகுநாத் திரு. விசேய், ஆகியோருக்கு நேற்று இந்திய பார்லிமெண்ட் எம். பிக்கள் வரவேற்புபசாரம் ஒன்று அளித்தனர்.

தமது கஷ்டங்கள் அனைத்துக்குமிடையே துணிகரமாகத் தமது கடமைகளையாற்றிவிட்டு, தாயகம் திரும்பியதற்காக இந்தியப் பிரதிநிகள் இருவரிடமும் எம். பி.க்கள் தமது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்தனர்.

## டிகோல் கருத்து

பாரிஸ் ஜூன், 22

மேற்கு ஆசியு மோதலின் பொறுப்புக்களை இஸ்ரேலும் அரபு நாடுகளுமே ஏற்க வேண்டுமென்றும் முதலில் இஸ்ரேல்தான் தாக்கியிருக்கிறதெனினும் தாக்குதலுக்குத் தயார் செய்தது அரபு நாடுகளேயென்றும் பிரெஞ்சு அதிபர் ஜெனரல் டிகோல் மந்திரிசபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.


கலங்கள் வேறு....
உள்ளடக்கம் ஒன்றே.




இடதுபுறத்தில் காணப்படுவது போன்ற புதிய பார்க்கர் சூப்பர் குயிங் காகிதக் கலங்கள் பலவற்றை நீங்கள் விரைவில் காண்பீர்கள். உங்களுக்கு பரிச்சயமான பழைய கலங்களிலும் பார்க்கர் சூப்பர் குயிங் கிடைக்கும் தான். எந்தக் கலத்தைத் தேர்ந்தெடுத்தாலும், கழிவுப் பொருள்களைக் கரைப்பதும் எழுதும் போதே பேனவைத் துப்புரவு செய்வதுமாகிய சோல்வ் - எக்ஸ் என்னும் சேர்மானப் பொருள் கொண்ட ஒரே மையாகிய பார்க்கர் சூப்பர் குயிங் உங்களுக்குக் கிடைக்கும்.




எல்லாப் பேனக்களுக்கும் சிறந்த மை இதுவே.
மகாராஜா ஓர்கனைசேஷன் லிமிட்டெட், பங்க்சால் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம

ஓமந்தைக் கிராமசபை

**கேள்வி விளம்பரம்**

மரையடித்தகுளம்-பெரிய புளியங்குளம் றோட் வேலைக்குக் கேள்வி விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரரிடமிருந்து 27-6-67 காலை 10 மணி வரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் 26-6-67 க்கு முன் அலுவலக நேரத்தில் கேள்வி வைப்புப் பணம் 35,-ம் பத்திரப் பணம் 5-ம் கிழக்கு மூலை வடக்கு [ஓமந்தை]க் கிராம சபை அலுவலகத்தில் கட்டி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எம்மிடமிருந்துபெறும் பத்திரத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும் மேலதிக விபரங்களை எமது கிராம சபை அலுவலகத்தில் அறிந்து சொள்ளலாம்.

அ. வீரகத்தி, ஜே. பி.
கி. ச. அக்கிராசனர்.

கிராமசபை அலுவலகம்,
கிழக்குமூலை வடக்கு,
ஓமந்தை.
18-6-67 2370

ஓமந்தைக் கிராமசபை

**கேள்வி விளம்பரம்**

பூவரசங்குளம் - மருதமடு றோட் வேலைக்குக் கேள்வி விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக் காரரிடமிருந்து 27-6-67 காலை பத்துமணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பிக்கவிரும்புவோர் 26-6-67 க்கு முன் அலுவலக நேரத்தில் கேள்வி வைப்புப் பணம் 25/- ரூபாவும் பத்திரப்பணம் 5/- ரூபாவும் கிழக்கு மூலை வடக்கு [ஓமந்தை]க் கிராம சபை அலுவலகத்தில் கட்டி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். எம்மிடமிருந்து பெறும் இப் பத்திரத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும். மேலதிக விபரங்களை எமது கிராம சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

அ. வீரகத்தி, ஜே. பி.
கி. ச. அக்கிராசனர்.

கி. ச. அலுவலகம்,
கிழக்குமூலை வடக்கு,
ஓமந்தை.
18-6-67 2371

## றேயலுக்கு வெற்றி

காங்கேசன்துறை, வியா.

இங்குவந்துள்ள 'பொலிரொயில்' என்னும் கப்பல் மாலுமிகளுக்கும் காங்கேசன்துறை றேயல் விளையாட்டுக்கழகத்திற்கு மிடையில் பட்டினசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் றேயல் விளையாட்டுக் கழகம்[4-0] கோல்களால் வெற்றியீட்டியது.

காங்கேசன்துறைப் பட்டினசபைசுகாதாரப் பரிசோதகர் மத்தியஸ்தம் வகித்தார்.

**REGAL - JAFFNA**

Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.

Elvis Presley &
Shelley Fabares
in
CALIFORNIA HOLIDAY

**2-வது வெற்றி வாரம்**

**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] **ஈறோஸ்** [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை
**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
**விஜயா** [மட்டுநகர்] **ஸ்ரீகிருஷ்ணு** [திருமலை] **மொடேர்ன்** [பதுளை]
**மொடேர்ன்** [பண்டாரவளை] **விஜிதா** [ஹட்டன்] **தீவொளி** [நுவரெலியா]
**கல்யாணி** [நாவலப்பிட்டி]
ஆகிய திரைகளில்
தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!
நடிக மன்னன் **சிவாஜி கணேசன்,**
நடிக ராணி **கே. ஆர். விஜயா,**
ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா,
நாகேஷ்



வி. கே. ஆர். பிக்சர்சின்
**செல்வம்**

## சுன்னாகம் பட்டணசபை
### சோலைவரி

1967-ம் ஆண்டு 1-ம் கந்தாயத்திற்குரிய சோலை வரியை பட்டணசபைக் கந்தோரில் அல்லது வரி அறவிடுபவரிடம் 5-7-67-ல் அல்லதுஅதற்குமுன் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளவும். குறிப்பிட்ட திகதிக்குள் வரிசெலுத்தத் தவறின் கூடுதலாக 10 வீத விருந்துப்பணமும் வரிப் பணத்துடன் சேர்த்து அறவிடப்படும் என்பதை சுன்னாகம் பட்டணசபை வரியிறுப்போருக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொ. நாகலிங்கம்
தலைவர்,
பட்டணசபை சுன்னாகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம்.
20-6-67 2369

**மகாஜனா**

## இல்லப் போட்டி முடிவுகள்

காங்கேசன்துறை, வியா.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்தன. காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்பிரிறிண்டன்ட் திரு. ஜி. டபிள்யூ லியனகே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். திருமதி லியனகே வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். சின்னப்பா இல்லம் முதலாவதாகவும் சின்னையா இல்லம் 2வதாகவும் அருளம்பலம் இல்லம் 3 வதாகவும் துரையப்பா இல்லம் 4 வதாகவும் வந்தன.

ஈட்டி எறிதலில் ரி. சிறிஸ்கந்தராஜா[143 அடி 2 அங்] பிரத்தியேக வெற்றிக் கிண்ணம் பெற்றார். நூதன உடையில் வ. ஜெயபாலனும், ரி. கந்ராஜும் முதலிடம் பெற்றனர்.

சாம்பியன்களாகத்தெரிவு செய்யப்பட்டோர். விபரம் வருமாறு: ஆண்கள் அதி உயர்பிரிவு கே. அருணசலம் சின்னையா இல்லம் உயர்பிரிவு கே, சிவஞானம் எஸ். சந்திரலிங்கம், சின்னையா இல்லம் இடைப்பிரிவு எஸ். சிறிதரன். (துரையப்பா இல்லம்), பி. இராசகாந்தன் [அருளம்பலம்இல்லம்]கீழ்ப்பிரிவு ஆர் ஸ்கந்தராஜா [சின்னையா இல்லம்], அதிகீழ்ப்பிரிவு பி. இராஜசூரியம் [சின்னப்பா இல்லம்].

பெண்கள்: உயர்பிரிவு ஜே. கௌசல்யா இடைப்பிரிவு என். பவானி கீழ்ப்பிரிவு எம். தங்கவேணி [அருளம்பலம் இல்லம்], அதி-கீழ்ப்பிரிவு எஸ். அரியலோகினி [துரையப்பா இல்லம்]

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
விடுமுறைதினங்களில் 4காட்சிகள்
ரவிச்சந்திரன் - வாணிஸ்ரீ
நடித்த
**தங்கத் தம்பி**

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
**தியாகராஜ பாகவதர்**
நடித்த
**சிவகாமி**

**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
எஸ். எஸ். ராஜேந்திரன் விஜயகுமாரி
நடித்த
**முத்துமண்டபம்**

## வரி விளம்பரம்

### தேவை

மேற்படி வைத்தியசாலையிலுள்ள தேநீர்ச்சாலைக்கு ஒரு தற்காலிக விற்பனையாளன் தேவை. பின்வரும் தகுதியுடையவர்கள் 30-6-67ல் கிடைக்கத்தக்கதாக மேற்படி சங்கத்தின் ''தலைவர்'' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் இரு நட்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கலாம். தராதரம்:-[1]J. S. C. சித்தியடைந்தோரும் [2] வயது 20 - 25க்குட்பட்டவரும். [3] தேநீர்க்கடை வியாபார அனுபவமுடையவரும். [4] நல்ல கையெழுத்துப் பயிற்சி உடையவரும் ஆக இருத்தல் வேண்டும். பிணை: ரொக்கம் ரூபா 250/-. சம்பளம்: ரூபா 75/- ஆரம்பம். கௌரவ காரியதரிசி, கூ. வை. சங்கம், மூளாய். 2461

மனேஜர்:

ஆங்கிலம் கணக்குடன் எஸ். எஸ். சி. சித்தி பெற்ற உதவி பாற்பண்ணை மனேஜர் தேவை. வயது 21க்கும் 30க்கு மிடையில். யாழ்ப்பாணத்தில் 3 மாத பயிற்சிக் காலத்தில் சம்பளம் இல்லை. வேலை பார்க்குமிடம் பொலன்னறுவை. ஆரம்ப சம்பளம் 150/-. பிணைப்பணம் ரூபாய் 1000/-. விண்ணப்பத்தோடும் தராதரப்பத்திரங்களின் மூலப்பிரதிகளோடும் வருகிற 26-ந் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நேரில் சந்திக்கவும். கூட்டுறவு பாற்பண்ணைச்சங்கம், இல. 67/1 அரசடி வீதி, யாழ்ப்பாணம். 2462

### வாடகைக்கு

மருதனமடம் சந்தியில் இருந்து உடுவிலுக்குச் செல்லும் வீதியில் 100 யாருக்குள், நீர், வெளிச்ச வசதிகளுடன் இரண்டு புதிய வீடுகள் வாடகைக்கு விடப்படும். தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: சி. சிவராமலிங்கம், ஆசிரியர், உடுவில். 2460

வீடு:

இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் காங்கேசன்துறை வீதியில் உள்ள 496-ம் இலக்க வீடு வாடகைக்கு கொடுக்கப்படும் விபரங்களுக்குக் குமரேசன் 217/1 கடைச்சாமி ஒழுங்கை, நீராவியடி என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். பிற்பகல் 2 மணி தொடக்கம் 6 மணி வரை வீட்டைப் பார்வையிடலாம். 2466

## பாண்டியனுக்கு முதலிடம்

சுழிபுரம், வியாழன்

பண்டத்தரிப்பு, இந்துக் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த போட்டியில் [பாண்டியன் இல்லம்] [248] புள்ளிகள் பெற்று முதல் இடத்தைப் பெற்றது.

இரண்டாவது இடத்தை [224 புள்ளிகள்] சோழ இல்லமும் மூன்ருவது இடத்தைச் சேர இல்லமும் [193] புள்ளிகள் பெற்றன.

கல்லூரி அதிபர் திரு. என். சிவஞானம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வடபகுதி பிரதம கல்வி உத்தியோகத்தர் திரு சி. ஏ. ஞானசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி ஞானசேகரம் பரிசில்களை வழங்கினார்.

### நன்றி நவிலல்

எமது திருமணத்தன்றும் வரவேற்புபசாரத்தின் போதும் வருகை தந்து நல்லாசி வழங்கியும் பாராட்டுக்கள் அனுப்பியும் அன்பளிப்புகள் நல்கியும் மகிழ்வித்த எல்லோர்க்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். எங்கள் நன்றியை தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

சி. க. திருச்சிற்றம்பலம்,
தி. மங்கையற்கரசி.

தேவாலயவீதி,
சங்கானை. 2467

### விற்பனைக்கு

மாடும் கன்றும்:

காலை மாலை ஏறக்குறைய பத்து போத்தல் பால் கறக்கக்கூடிய பால்மாடு இளங்கன்றுடன் விற்பனைக்குண்டு. சி. கந்தையா, புளியங்கண்டுப் பிள்ளையார் கோவிலடி, ஆனைக்கோட்டை. 2468

மோட்டார் சயிக்கிள்:

B. S. A 25 E. Y 6680 மோட்டார் சயிக்கிள் உடனடியாக விற்பனைக்குண்டு. கீழ்க்காணும் விலாசத்தில் பார்வையிடலாம். 42, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 2463

### கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் கோவிலில் இன்று இரவு நல்லைஞானசம்பந்தர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் ஔவையார் என்னும் பொருள்பற்றிக் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

## ஐயாறன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பாயின்மீது ராத்தல் மூன்றரை டாலர்' என்றும், மற்றொன்றில் 'மூன்று டாலர்' என்றும் எழுதியிருந்தது.

மூன்று டாலர் பீப்பாயில் இருந்த நண்டுகள் வழியிலே மூன்றரை டாலர் பீப்பாய்க்குப் பாய்ந்து சென்று தங்கள் மதிப்பை உயர்த்திக் கொள்ள முயன்றதாம்!''

நம்மில் பலரும் சாவையே நோக்கிச் செல்லும்போதும் ராத்தல் மூன்று டாலர் நண்டைப்போல பணம் பணம் என்று பேயாய்த் திரிந்து, அதன்மூலம் நம் மதிப்பை உயர்த்திக் கொள்ள முயலுகிறோம். ஆனல் தியாகவீரர் அரிய நாயகம் பணத்தை ஒரு பொருட்டாகக் கருதாமல், பாரதநாட்டிலும் உலகிலும் பெருமதிப்படைந்து விட்டார்.

அவர் இங்கு வந்து கல்வி இலாகா டைரக்டராகவே ஆகியிருந்தாலும் இன்றுள்ள பெரும் புகழைப் பெற்றிருக்க முடியுமா?

ஃ ஃ ஃ

பிறப்பு மூப்புப் பெரும்
பசி வான்பிணி
இறப்பு நீங்கியிங் கின்பம்
வந்தெய்திடும்
சிறப்பா சேறையுட் செந்
நெறியான் கழல்
மறப்பதின்றிமனத்தினுள்
வைக்கவே.

— அப்பர்சுவாமிகள்

[திருச்சேறையுட் செந்நெறியில் வீற்றிருக்கும் சிறப்பை உடைய பெருமான் கழலார் திருவடிகளை மறவாமல் மனத்துள் வைத்தால், பிறப்பு, மூப்பு, மிக்கபசி, மிக்கபிணி, இறப்பு ஆகியவை நீங்கி இம்மையிலேயே இன்பம் வந்து எய்தும்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையின் கொடுமை வாழ்வை முடித்தது

யாழ்ப்பாணம், வெள்ளி

'வறுமையின் கொடுமையால் நான் நச்சுத்திராவகம் அருந்தி எனது வாழ்வை முடித்துக்கொள்கிறேன்' எனக் கடிதம் எழுதிவைத்துவிட்டுத் தனது வாழ்வை முடித்துக்கொண்டார் அத்தியடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர். மரணமான செல்வத்துரை சிவரத்தினம் (வயது 24) என்ற வாலிபரின் மரணம் சம்பந்தமாக யாழ்ப்பாணப் பகுதி மரண விசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் மரண விசாரணை நடத்தினார்.

மரணமான சிவரத்தினம் பல காலமாக வறுமையில் கஷ்டமடைந்துவந்ததாகவும், மனைவியின் நகைகளை விற்றுக் கார் வாங்கி அதிலும் நஷ்டமடைந்து பின்னர் காரையும் விற்றதாகவும், அவருக்கு முதற் குழந்தை பிறந்து 8 நாட்கள் என்றும், பணமில்லாததால் அவர் சம்பவம் நடந்த தினத்தன்று மனைவியின் தகப்பனாரிடம் சென்று பணம் கேட்டதாகவும், ஆனால் அவர் பணம் கொடுக்க மறுத்ததாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். [ந. நி.]

## சீனமீது கேரளா கண்டனம்

திருவனந்தபுரம், ஜூன் 22

சீனாவில் இந்திய தூதரக அதிகாரிகள் நடத்தபட்டது அநீதியான முறைகளுக்கு கேரள சட்டசபை ஒருமனதாக கண்டனமும் கவலையும் தெரிவித்தது.

இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரை முதன்மந்திரியாகக்கொண்டது கேரள அரசாங்கம்.

பீக்கிங் சம்பவங்கள் கட்சி வேறுபாடின்றிக் கண்டிக்கப்படவேண்டியவை என்றும் சர்வதேச நெறிமுறைகளை மீறிய இந்திய மக்களின் சுயமரியாதையை இழிவுபடுத்துவது பீக்கிங்கில் நடந்துள்ள சம்பவங்கள் என்று கேரள முதல்மந்திரி நம்பூதிரிபாத் கூறினர்,

## அரசாங்கமே....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

யாழ்ப்பாண முஸ்லீம் மக்களுக்கு இருகல்லூரிகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றான உஸ்மானியாக் கல்லூரி இன்று பெரும் அவல நிலையில் இருக்கின்றது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் படிக்கும் இப்பள்ளிக்கூடம் ஒரு மாட்டுக் கொட்டில்மாதிரி இருக்கின்றது. ஏன் மாணவர்கள் இல்லாத நேரங்களில் ஆடுமாடுகள்தான் தங்குகின்றன. அடைப்பில்லாத மடம்போல் காட்சியளிக்கும் பாடசாலைக்கு ஒரு மலசலகூடம்கூட இல்லை. மாணவர் குடிக்கத் தண்ணீர்வசதியில்லை. ரோட்டில் இருக்கும் குழாய் நீர்தான் எம் மாணவருக்குத் தஞ்சம். அதிலும் தண்ணீர் வராவிட்டால் எமது மாணவர்களின் நிலை பரிதாபத்துக்குரியது.

இவற்றை எல்லாம் நாம் கல்விப்பகுதியிடம் விளக்கினோம். ஆனால் பலனில்லை. அரசாங்கத்திடம்பணமில்லை என்று கல்வி இலாக்கா கையைவிரித்துவிட்டது. இப்படி அரசாங்கமே எம்மைப் புறக்கணிக்கிறது.

குவாஜி எம். எம். சுல்தான் தலைமையுரை நிகழ்த்தினார். பல முஸ்லிம் பிரமுகர்கள் பேசினார்கள்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஜூன் மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது,

## மாணவிகளுக்கு அறிவுரை

சாவகச்சேரி, வியாழன்

''மாணவிகளுக்குக்குடும்ப நலக்கல்வி அவசியம். கல்லூரியில் கல்வி பயிலும் காலத்திலேயே மாணவிகள் குடும்பநலக் கல்வியையும் கற்றுக்கொண்டால் தம் வருங்கால வாழ்வில் வெற்றியடைவது திண்ணம்'' என்று சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய மண்டபத்தில் திரு. மு. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற வள்ளுவர் விழாவில் பேசிய திரு. க வஜ்ரவேலு முதலியார் கூறினார்.

## கண்டக்டர்களுக்கு ஊக்க போனஸ்

சென்னை, ஜூன் 22

தமிழக அரசாங்க போக்குவரத்து பஸ்களில் கடமையாற்றும் கண்டக்டர்களுக்கு ஊக்க போனஸ் ஒன்று அளிக்கத் தமிழக அரசாங்கம் ஆலோசித்துள்ளது.

கண்டக்டர்களின் வசூலைப் பொறுத்து அவர்களுக்கு ஊக்கபோனஸ் அளிக்கும் நோக்கத்துடன், பஸ் கட்டணங்களைப் பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அரசாங்கம் கேட்டுள்ளது.

## ''விரும்பினாலும் . . .

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த உயிரற்றசட்டத்தைக் கண்டே சிங்கள மக்கள் அஞ்சுகிறார்கள். இதனால் அரசாங்கத்துக்குப் பெரும் தலையிடி. ஆதலால் நேரடியாகத் தமிழ் உரிமையை கேட்காது, ஒவ்வொருபாடசாலையிலும் சமயபாடத்தைப் போதிக்க வழிசெய்து அதன்மூலம் தமிழைக் காப்பாற்றவேண்டும்.

ஆசிரியர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் ஒரு ஆலோசனைச் சபையை நிறுவவேண்டும். ஆசிரியர்களிடையே பாகுபாடு காட்டக்கூடாது. எதிர்கால சமுதாயத்தை அரசியல்வாதிகளால் உருவாக்க முடியாது. அது ஆசிரியர்கள் கையில்தான் உண்டு.

## பலாலி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாகவும் ஒவ்வொருஇறங்குதுறையும் 100அடிநீளமும், 10அ.அகலமும்உடையதாக அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திலும் ஒரு இறங்குதுறை அமைக்கநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

அச்சுவேலி, மல்லாவி, நெடுந்தீவு ஆகிய இடங்களில் பொலிஸ் நிலையங்கள் அமைத்தல், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி புதிய வார்ட் கட்டட நிதி, புதிய வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் அமைத்தல் வல்வெட்டித்துறை அச்சுவேலி பண்டத்தரிப்பு, பூநகரி ஆஸபத்திரிகளிலுள்ள குறைபாடுகள், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடங்களிலுள்ள சீர்கேடுகள் ஆகியனபற்றியும் கூட்டத்தில்ஆராயப்பட்டது. [ந. நி.]

## கிராம சேவகர்கள் இடமாற்றம்

காங்கேசன்துறை, வியாழன்

வலி - வடக்குக் காரியாதிகாரி பிரிவு கிராமசேவகர்கள் அடுத்த மாதம் 1-ந் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப்படவிருக்கின்றனர்.

திரு. ஆர். பரராஜசிங்கம் ஏழாலையிலிருந்து பலாலிக்கும் திரு. ஆர். சுப்பிரமணியம் குப்பிளானிலிருந்து கட்டுவன் பகுதிக்கும் மாற்றப்பட்டுள்ளனர். திரு. என். கதிரேசன் பலாலியிலிருந்து குப்பிளான் பகுதிக்கும் திரு. வி. நடராஜா கட்டுவனிலிருந்து மாவிட்டபுரம் பகுதிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். திரு. என். நடராஜா மாவிட்டபுரத்திருந்து ஏழாலைப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். திரு. எஸ். எஸ். சின்னத்தம்பி உடுவிலிலிருந்து பளை காரியாதிகாரி பிரிவான செம்பியன்பற்றுக்கு மாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

## மாணவ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர்களை உடனடியாக சொந்த இடங்களுக்கு மாற்றம் செய்ய வேண்டும். யாழ்ப்பாணம், வவனியா மாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள், பின் தங்கிய இடங்களுக்குசெல்ல விரும்பாததால் வெளியிடங்களில் உள்ள பின் தங்கிய இடங்களை சொந்த இடமாகக் கொண்ட ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய வேண்டும்,

ஒருவகையான திட்டமில்லாமல் இடமாற்றம் செய்யப் படுகிறது. ஆதலால் வெளிமாகாணங்களில் கடமையாற்றும் கால எல்லையை தெரிவித்து இடமாற்றம் செய்ய வேண்டும்.

## செம்பியன் பற்றில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ளார்கள்.

கடந்தவாரத்தில்இப்பகுதியிலுள்ள மணற்காடு என்ற இடத்திலும் பெற்ரோல் ஊறுதியாக அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. இந்நில ஆராய்ச்சி முடிய இன்னமும் சுமார் 6 மாத காலம் செல்லலாமென்றும் இது பற்றிய ஆராய்ச்சி அறிக்கையை பிரெஞ்சு நிபுணர்கள் அடுத்த வருடம் மே மாதத்திற் முன்னர் இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பார்களென்றும் தெரிகின்றது. [ந. நி.]

## தி. மு. க...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]]

மெனவும் முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தமிழக அரசாங்கம் பற்றி இலங்கை அரசாங்கம் நன்கு அறிந்திருக்கிறது என்றும் தமிழக அரசின் மீது இலங்கை அரசுக்கு நல்லெண்ணம் இருக்கிறது என்றும் துணைக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த திரு. அண்ணுதுரை, தமிழர் ஒருவரை இலங்கையில் இந்திய ஹைகமிஷனராக நியமிக்கும்படி தமது அரசாங்கம் இந்திய மத்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## நெசவு நிலைய திறப்பு விழா

அச்சுவேலி, வெள்ளி

பத்தமேனி கிராம முன்னேற்றச் சங்கத்தினரின் நெசவு நிலையத்தை யாழ் [illegible] நாளை மாலை திறந்து வைப்பார்.

# 'மாணவர் காடைத்தனமாக நடக்கக்கூடாது'

— பொலிஸ் சுப்ரிண்டன்ட்

யாழ்ப்பாணம், வெள்ளி

''மாணவர்கள் எப்பொழுதும் உண்மை பேசுபவர்களாகவும், நேர்மையானவர்களாகவும், ஒழுக்கம் உள்ளவர்களாகவும் நடந்துகொள்ளவேண்டும். ஒழுக்கமற்ற முறையில் காடைத்தனமாகப் பல மாணவர்கள் வீதிகளிலும், பொதுமக்கள் கூடி நிற்கும் இடங்களிலும் நடந்துகொள்வதாக பொலிஸாருக்குப் பல புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த நிலை மாறி மாணவர்கள் நல்லஒரு சமுதாயத்தை அமைக்க முன்வருவார்கள் என நான் நம்புகிறேன்.''

மேற்கண்டவாறு நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடபகுதிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் பேசுகையில் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திரு. இ. சபாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. ஆர். சுந்தரலிங்கம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது: மத்திய கல்லூரியின் பழைய மாணவனான நான் இன்று இவ்வைபவத்திற்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். எதிர்காலத்தில் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பு இன்றைய மாணவர்களிடம் இருக்கிறது. இந்தப் பொறுப்பை மறந்து மாணவர்கள் ஊதாரித்தனமாக நடந்துகொள்கிறார்கள். இப்படியானமாணவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப் பொலிஸார் தயங்கமாட்டார்களென நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.''

திருமதி ஆர். சுந்தரலிங்கம் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினார்.

(ந. நி.)

# தீ விபத்தில் ஒரு குடும்பம் குழந்தை மாண்டது

யாழ்ப்பாணம், வெள்ளி

தற்செயலாகநடைபெற்ற தீவிபத்தில் சிக்கியதால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலத்த நெருப்புக் காயங்களுக்குள்ளாகி யோகேஸ்வரன் என்ற 9 மாதக்குழந்தை நேற்றுக் காலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமானது. இப்பரிதாபசம்பவம் நேற்று முன்தினம்இரவு சித்தங்கேணியில் நடைபெற்றது,

கம்பஹாவில் வியாபாரம் செய்பவர் கிருஷ்ணபிள்ளை. [30 வயது] இவர் நேற்று முன்தினமிரவு தமது வீட்டிலிருந்து தமது மோட்டார் சைக்கிளைத் திருத்திக்கொண்டிருந்தாராம். அப்போது தமது மனைவியான மகேஸ்வரியை [21 வயது] மண்ணெண்ணெய் விளக்கை அங்கு கொண்டுவரும்படி கூறியதும் மகேஸ்வரி அங்கு விளக்கைக்கொண்டுவந்த போது மரணமான அவர்களது மகனான யோகேஸ்வரன் அந்த விளக்கைத் தட்டியதால் நெருப்பு அருகிலிருந்த மோட்டார்சைக்கிள் பெட்ரோல் டாங்கியில் பற்றியதாகவும், இதனாலேயே மூவரும் நெருப்புக் காயங்களுக்குள்ளானதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறும் இருவரிலும் மகேஸ்வரியின் நிலையும் கவலைக்கிடமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மரணமான குழந்தையின் மரணம் சம்பந்தமாக மரண விசாரணை நடைபெறுகின்றது.

[ந. நி.[

## 'இசைக்கலையை வளர்க்கவேண்டும்'

சுழிபுரம், வியாழன்

''எமது மனதை உருக்கும் தெய்வீகத் தன்மைவாய்ந்த இசையைப் போற்றிப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் இன்றியமையாத கடமையாகும். அரசாங்கத்தின் உதவி கிடைக்காதுவிட்டாலும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் இசைக் கலையை நன்கு வளர்க்க வேண்டும்.''

மேற்கண்டவாறு வட்டுக்கோட்டை கலைக்கழக ஐந்தாவதுஆண்டு நிறைவுவிழாவுக்கு தலைமை வகித்துப் பேசிய டாக்டர் க.சிவஞானரத்தினம் குறிப்பிட்டார். ஹொநிலையத் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## 'கருவுறும் காலத்திலே...'

சாவகச்சேரி, வெள்ளி

'பிள்ளைகள் சுகத்துடன் வாழத் தாய்மார் ஒவ்வொருவரும் தாம் கருவுறும் காலத்திலேயே போஷாக்குள்ள உணவுகளை அருந்துதல் வேண்டும்'

இங்கு நடைபெற்ற சுகாதாரவார விழாவின் போது பேசிய டாக்டர் எஸ். மகாதேவா மேற்கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் பேசுகையில்,' சுகாதார முறைப்படி வாழும்போது வாழ்வில் எத்தகைய துன்பமும் ஏற்பட இடமிருக்காது' என்றார். மற்றும் பலரும் பேசினர்.

## மீசாலை கொள்ளை வழக்கு

சாவகச்சேரி, வியா.

மீசாலை கொள்ளை வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சாட்சியங்கள் அனைத்தும் பதிவு செய்து விட்டது எனத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் வழக்குத் தொகுப்புரைக்காக ஜூலை 5-ந்திகதிக்கு ஒத்திவைத்தார்.

## மரண அறிவித்தல்

சண்முகம்

ஓய்வுபெற்ற சிறுப்பர் சண்முகம் காலமாகிவிட்டார். இவர் வேலாயுதபிள்ளை [மலாயா], விஜயரத்தினம் [விவசாய இலாகா], காலஞ்சென்றவிஜயலக்சுமி, விஜயாம்பாள் ஆகியோரின் தந்தையாரும் மருதப்பு, நாகேஸ்வரி, கந்தையா ஆகியோரின் மைத்துனரும், பொன்னுத்துரை [படல்ஹம], சோமசுந்தரம் [பதிவுக்காரியாலய ஆபீஸ்] காந்திமதி ஆகியோரின் மாமனாரும், கனகதுரை, மகாலக்சுமி, ரவீந்திரன் விஜிதா ஆகியோரின் பேரனுருமாவர்.

அன்னாரது பூதவுடல் இன்று காலை [23-6-67] 9 மணிக்கு ஈமைக்கிரியைகளுக்காக 30, குறுக்கு வீதி, நல்லூரிலிருந்து செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

2373

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org